**செய்தி வெளியீடு எண்: 467** **நாள் : 29.09.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (29.9.2015) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் சீர்மிகு திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்களுக்குக் கொண்டுசெல்லும் குறும்படங்களைத் தங்கு தடையின்றி இரவிலும், பகலிலும் பொதுமக்கள் பார்க்கும் வகையில் 20 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான 32 அதிநவீன மின்னணு விளம்பர வாகனங்களை (Hi–Tech LED Publicity Vans) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

மக்கள் நலனுக்கென தமிழ்நாடு அரசு வகுத்துவரும் திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அரசின் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களால் விளையும் பயன்கள் குறித்தும் மக்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்வது போன்ற பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது.

இப்பணிகளை மேலும் சிறப்புடன் மேம்படுத்திட, தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்களுக்குக் கொண்டுசெல்லும் குறும்படங்களைப் பொதுமக்கள் பார்த்து பயன்பெறும் வகையில் மின்னாக்கி வசதியுடன் கூடிய அதிநவீன மின்னணு விளம்பர வாகனங்களை வாங்க 20 கோடியே 80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த அதிநவீன மின்னணு விளம்பர வாகனங்களில் வாகனத்தின் இயக்கம், வாகனம் சென்று கொண்டிருக்கும் இடம் மற்றும் வேகம் முதலியவற்றைக் கண்காணிப்பதற்காக நவீன வாகன கண்காணிப்பு சாதனம் (Latest Vehicle Tracking Equipment), பகலிலும் இரவிலும் வேறுபட்ட ஒளி அளவினைக் கட்டுப்படுத்தி தெளிவாகவும், தொலைவிலிருந்தும் பார்க்க இயலும் வகையிலான திரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னணுத் திரையானது 15.75 அடி அகலமும் 6.25 அடி உயரமும் கொண்டது. ஆயிரக்கணக்கானோர் ஒரே சமயத்தில் படக்காட்சியினைத் துல்லியமாகவும் பல வண்ணங்களில் பிரகாசமாக காணும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகமாக கூடுமிடங்களான திருவிழாக்கள், அரசு விழாக்கள், கண்காட்சிகள், சந்தைகள் போன்ற அனைத்து இடங்களிலும் இம்மின்னணு விளம்பரத் திரை 360 டிகிரியில் அனைத்து திசைகளிலும் சுழலும் வசதியுடன் பொருத்தப்பட்டுள்ளது. இம்மின்னணுத் திரை 6 அடி உயரத்திற்கு உயர்த்தப்பட்டு அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் எளிதில் காணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மின்னணுத் திரையினை பார்வையிடும்

பொதுமக்களின் எண்ணிக்கையையும் வாகன இருப்பிடத்தையும் கண்காணிக்க கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் அரசின் சீர்மிகு திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் 20 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான 32 அதிநவீன மின்னணு விளம்பர வாகனங்களை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பயன்பாட்டிற்காக வழங்கிடுவதன் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் 5 செய்தி மக்கள் தொடர்புத் துறை வாகன ஓட்டுநர்களுக்கு சாவிகளை வழங்கினார்கள்.

மேலும், இந்த நிகழ்ச்சியின் போது, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் குறும்பாடல்கள் மற்றும் குறும்படங்கள் அடங்கிய குறுந்தகட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள்: 29.9.2015**